**ஜனவரி 12 தேசிய இளைஞர் தினம்**

# சமுதாயத்தின் முதுகெலும்புகள்



## யார் இவர்கள்?

இவர்களின்றி எந்த சமூகத்தின் முன்னேற்றமும் சாத்தியமில்லை. ஒவ்வொரு சமூகத்தின் உயர்வையும் தீர்மானிக்கும் மாபெரும் சக்தி இவர்கள். அதுவே ‘இளைஞர்’ சக்தி.

உலகின் வரலாறு உருவான காலம் முதல் இன்று வரை சத்தியமோ, அசத்தியமோ எல்லா கொள்கைகளும், தன்னை வளர்த்துக் கொள்வதற்கு அவைகள் பயன்படுத்தியது இளைஞர்களைத்தான். அந்தளவிற்கு இளமைப் பருவம் என்பது எல்லா சமூகத்திலும் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆனால் மற்ற எல்லா சமூகங்களை விட இஸ்லாம் இளமைப் பருவத்திற்கு அதிக முக்கியத்துவம் தருகிறது. அத்தோடு இளமையை சரியாக கழிப்பவர்களுக்கு உயர்ந்த கண்ணியத்தை வாக்களிக்கிறது.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் ;

سَبْعَةٌ يُظِلُّهُمُ اللهُ فِيْ ظِلِّهِ يَوْمَ لَا ظِلَّ اِلَّا ظِلُّهُ

நிழலே இல்லாத மறுமை நாளில் அல்லாஹ் ஏழு நபர்களுக்கு

தனது அர்ஷின் நிழலைத்தருகிறான். அதில் ஒருவர் தனது இளமைப்பருவத்தை இஸ்லாமிய நெறியில் கழித்தவர்.

அதே போல் இஸ்லாத்தின் அனைத்துக் கட்ட வளர்ச்சியிலும் மிகப்பெரும் பங்களிப்பை செய்தவர்கள் இளைஞர்கள். இந்நிலையை நபிமார்கள் முதல், ஸஹாபாக்கள் தொடர்ந்து, இஸ்லாம் எழுச்சி பெற்ற எல்லாக் காலங்களிலும் பார்க்க முடியும். அதற்கு ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் உண்டு.

**நபிமார்களில்...**

**ஹழ்ரத் இப்ராஹீம் (அலை)**

தந்தை வழியில் தனயன் எனும் நிலை இன்றைக்கும் நீடிப்பதைப் பரவலாக காணுகிறோம். ஆனால் ஹழ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தந்தை ஆஜர் தீவிர சிலை வணக்கத்தில் இருந்த போதிலும், அச்சிலை வணக்கத்திற்கெதிராக மிகப்பெரும் போராட்டம் நடத்திய வீர இளைஞர். இப்போராட்டத்தில் தனது உயிருக்கே ஆபத்து விளைவிக்கும் 'நெருப்புக் குண்டம்' போன்ற சோதனைகளையும் தாங்கிக் கொண்டார்கள்.

இந்நிகழ்வை அல்குர்ஆனின் 21 வது அத்தியாயம் 57, 58 ஆகிய வசனங்களில் இறைவன் சுட்டிக் காட்டுகிறான்:

وَتَاللَّهِ لَأَكِيدَنَّ أَصْنَامَكُمْ بَعْدَ أَنْ تُوَلُّوا مُدْبِرِينَ. فَجَعَلَهُمْ جُذَاذًا إِلَّا
كَبِيرًا لَهُمْ لَعَلَّهُمْ إِلَيْهِ يَرْجِعُونَ

நீங்கள் திரும்பிச் சென்ற பிறகு அல்லாஹ் மீது ஆணையாக உங்களது சிலைகளுக்கு சதி செய்வேன் (என்று கூறினார்) அவ்வாறே! அவர் அவற்றில் பெரியதைத் தவிர (மற்ற) எல்லாவற்றையும் துண்டு துண்டாக்கினார். அவர்கள் அதன்பால் திரும்புவதற்காக (அதை அவர் விட்டு விட்டார்)

இப்ராஹீம் நபியின் அறிவார்ந்த வீரத்தை இவ்வசனங்கள் எடுத்துக் கூறுகின்றன. எல்லா சிலைகளையும் உடைத்த அவர்கள் பெரிய சிலையை மட்டும் விட்டு, அம்மக்கள் சிலைகளை யார் உடைத்தது? என்று கேட்கும் போது பெரிய சிலைதான் என்று இப்ராஹீம் நபி கூறினார்கள்.

அது எப்படி? சிலை இச்செயலை செய்யும் என்று அம்மக்கள் கேள்வி எழுப்பும் போது, சிலையின் இயலாமையை புரிய வைத்து, ஏக இறைக் கொள்கையை அறிவோடும், துணிவோடும் எடுத்துரைத்தார்கள்.

**ஹழ்ரத் யூசுப் (அலை)**

வாலிபமும், அழகும் நிறைந்த இளைஞரான நபி யூசுப் (அலை) அவர்கள் விபச்சாரத்திற்கு அழைத்த பெண்ணின் சூழ்ச்சியிலிருந்து தன்னை எப்படியெல்லாம் பாதுகாத்துக் கொண்டார்கள் என்று குர்ஆன் பதிவு செய்யும் வரலாறு இன்றைய இளைஞர் சமூகத்திற்கு மிகப்பெரும் முன்மாதிரியாகும்.

அல்குர்ஆன் இச்சம்பவத்தை அழகாக விவரிக்கிறது:

وَرَاوَدَتْهُ الَّتِي هُوَ فِي بَيْتِهَا عَن نَّفْسِهِ وَغَلَّقَتِ الْأَبْوَابَ وَقَالَتْ هَيْتَ لَكَ ۚ

قَالَ مَعَاذَ اللَّهِ ۖ إِنَّهُ رَبِّي أَحْسَنَ مَثْوَايَ ۖ إِنَّهُ لَا يُفْلِحُ الظَّالِمُونَ

அவர் எந்த பெண்ணின் வீட்டில் இருந்தாரோ அவள் அவர் மீது விருப்பங் கொண்டு, கதவுகளை தாழிட்டுக் கொண்டு (தன் விருப்பத்திற்கு இனங்குமாறு) 'வாரும்' என்று அழைத்தாள். (அதற்கு அவர் மறுத்து) 'அல்லாஹ் (இத்தீய செயல்களிலிருந்து) என்னைக் காத்தருள்வாயாக. நிச்சயமாக (உன் கணவர்) என் எஜமானர், என் இடத்தை அழகாக (கண்ணியமாக) வைத்திருக்கிறார். அநியாயம் செய்பவர்கள் நிச்சயமாக வெற்றி பெற மாட்டார்கள் என்று கூறினார்.

**(அல்குர்ஆன் 12 : 23)**

ஆபாசத்தையும், உடல் உணர்வையும் அலைந்து திரிந்து தீர்த்துக் கொள்ளும் இளைய சமுதாயமும், அதற்கு ஒத்துழைப்பு தரும் விதத்தில் 'சிவப்பு விளக்கு பகுதி'களையெல்லாம் செயல் திட்டங்களாக கொண்டுள்ள இன்றைய கேடு கெட்ட அரசாங்கமும் இது போன்ற தீர்க்கதரிசிகளை முன்மாதிரிகளாக கொண்டால் நாடும்

சிறப்படையும், எதிர்கால தலைமுறையும் சீர்பெறும்.

**குகைவாசிகள்**

குறிப்பிட்ட சில இளைஞர்கள் தாம் வாழ்ந்த சமூகத்தில் நிரம்பியிருந்த குஃப்ரான செயல்களை வெறுத்து, அதற்கெதிராக போராடி, இறுதியில் ஏக இறைக் கொள்கைக்காக அவ்விடத்தை விட்டும் வெளியேறி குகையில் ஒதுங்கினர். இவர்களது அழகிய வரலாற்றை அல்குர்ஆனின் பதினெட்டாவது அத்தியாயம் சூரத்துல் கஹ்ஃபில் விவரிக்கிறது :

ஏக இறைக் கொள்கைக்காக போராட்டம் நடத்திய அவர்கள் இளைஞர்கள்தான் என்பதையும் தெளிவாக சுட்டிக் காட்டுகிறது:

அவர்களது வரலாற்றை உண்மையுடன் நாம் உமக்கு கூறுகிறோம். நிச்சயமாக அவர்கள் இளைஞர்களாவர். அவர்கள் தம் இறைவனை நம்பினார்கள். மேலும் நாம் அவர்களுக்கு நேர்வழியை அதிகப்படுத்தினோம்.

எங்கள் இறைவன் வானங்கள் மற்றும் பூமியின் இறைவனாவான். அவனையன்றி (யாரையும்) கடவுளாக பிரார்த்திக்கவே மாட்டோம். அவ்வாறு செய்தால், நாங்கள் வரம்பு மீறிய சொல்லைக் கூறியவர்களாவோம் என்று அவர்கள் (துணிவுடன்) நின்ற போது அவர்களின் உள்ளங்களை நாம் மேலும் பலப்படுத்தினோம்.

**(அல்குர்ஆன் 18 : 13,14)**

எதிலும் சாதிக்க அஞ்சும் இளைஞர்களைத்தான் இன்று பரவலாகக் காணுகிறோம். உள்ளத்தில் ஏக இறை நம்பிக்கையில்லாமல், தடுமாற வைக்கும் எண்ணங்களை உள்ளத்தில் ஏற்றினால் எங்கே நெஞ்சுரம் உண்டாகும்? குகை இளைஞர்களின் உள்ளத்தில் நிரம்பியிருந்த இறைக் கொள்கை இன்றைய இளைஞர் சமூகத்திற்கு வந்துவிட்டால், அவ்வுள்ளத்தை பலப்படுத்தும் பொறுப்பை இறைவன் எடுத்துக் கொள்கிறான். இறைவனே நமது உள்ளத்திற்கு உரமாகும் போது முஸ்லிம் இளைஞர்கள் சாதிக்காத துறை ஏதேனும் மிஞ்சுமா? இன்றைய இளைஞர் சமூகம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளது.

**அகிலத்தின் அருட்கொடை அண்ணல் நபி (ஸல்) அவர்கள்**

முஸ்லிம் சமூகத்தின் மிகப்பெரும் அவலமாக நமது இளைஞர்கள், கன்றாவதியான காட்சிகளில் கற்பனையாக மட்டுமே வலம் வந்து, கேவலமான கற்பனைகளுக்கு மட்டுமே தீனி போடும் கேடு கெட்ட இன்றைய நடிகர்களும், நடிகைகளும்தான் அவர்களது முன்மாதிரிகள். அதே சமயம் உலகின் மனித சமூகம் சந்திக்கும் அத்துனை துறைகளில் நூறு சதவிகிதம் வெற்றி பெற்ற ஒப்பற்ற தலைவராக, மாற்றார்களே சான்று பகரும் அளவிற்கு சாதனையாளராக வாழ்ந்தவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள்.

ஆன்மீகம், அரசியல், சமூகம், பொருளாதாரம், அறிவியல், குடும்பம் போன்ற எல்லாத் துறைகளிலும் தேர்ச்சி பெற்ற பெருமானாரையும், அவர்களது தூய வரலாற்றையும், நமது இஸ்லாமிய இளைஞர்கள் நெஞ்சில் ஏந்தினால் எதிர்கால இஸ்லாத்தின் வரலாறு நமது இளைஞர்களாலேயே வளம் பெறும் என்பதில் நிச்சயம் சந்தேகமில்லை.

**ஸஹாபாக்களில்...**

நாயகத்தின் பயிற்சிப் பாசறையில் உருவான நபிதோழர்களில் பிரபல்யமான தியாக வரலாற்றிற்கு சொந்தமான அத்துனை ஸஹாபாக்களும் இளைஞர்களாகவே இருந்ததாக வரலாறு கூறுகிறது.

*ஒட்டுத்துணி கூட இல்லாமல், சுடும் பாறையிலும், மணலிலும் வேதனை செய்யப்பட்டபோது 'அஹத் அஹத்' அல்லாஹ் ஒருவன் அல்லாஹ் ஒருவன் என்று ஏகத்துவ கீதம் பாடிய பிலால் (ரளி) அவர்களும்,

*இஸ்லாத்தின் விரோதிகள் கொலை செய்ய நிறுத்திய சமயம், நீ கொல்லப்பட்டால், உன் மனைவி விதவையாகிவிடுவாள், குழந்தைகள் அநாதைகளாகிவிடும், யோசித்துக் கொள் என்று சொன்ன போது எவ்வித தயக்கமுமின்றி நான் இருகூறுகளாக பிளக்கப்பட்டாலும் ஈமான் இழக்க மாட்டடேன் என்று உரத்துச் சொன்ன யாஸிர் (ரளி) அவர்களும்,

* இஸ்லாத்தின் தூய கொள்கையை தான் விட வேண்டுமென்பதற்காக தனது தாய் உண்ணாவிரதமிருந்து தன் உயிரை

மாய்த்துக் கொள்ள முனைந்த போது, உனக்கு இதுபோல் 100 முறை உயிர் வாழும் அவகாசம் வழங்கப்பட்டு 100 முறை உன் உயிரை நீ மாய்த்துக் கொண்டாலும், எனது ஈமானை நான் விடப்போவதில்லை என்று வீர முழக்கமிட்ட ஸஃதுப்னு மாலிக் (ரளி) அவர்களும்,

இஸ்லாமிய இளைஞர்களின் தியாக வரலாற்றிற்கு அழகிய முன்மாதிரிகள்.

**எழுச்சியின் முன்மாதிரிகள்**

ஸஹாபாக்களின் காலத்திற்கு பிறகு, இஸ்லாம் எழுச்சி பெற்ற அத்தனை காலங்களிலும் அந்த எழுச்சிக்கு காரணமாக இருந்தவர்கள் சிறிய வயதுகளே நிரம்பிய இளைஞர்கள்.

*900 வருடங்கள் ஸ்பெயினை ஆண்ட இஸ்லாமிய கொள்கைக்கு அடித்தளமிட்டவர்கள், 17 வயதே நிரம்பிய 'தாரிக்பின் ஜியாத்' (ரஹ்) அவர்கள்.

*இந்திய மண்ணில் இஸ்லாம் உருப்பெறுவதற்கு முதல் காரணியாக நின்று செயலாற்றிய 'முஹம்மது பின் காஸிம்' (ரஹ்) அவர்களின் வயது வெறும் 18.

*'குதைபதிப்னு முஸ்லிம்' என்ற 20 வயது இளைஞர்தான் மத்திய ஆசியாவில் இஸ்லாமிய வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்கள்.

*மூஸா இப்னு நள்ர் (ரஹ்) அவர்கள் வட ஆப்பிரிக்காவிலும், சிலுவையுத்த நாயகனாக சித்தரிக்கப்பட்ட 'சுல்தான் சலாஹுத்தீன் அய்யூபி' (ரஹ்) அவர்களும் சிறு வயதுடைய இளைஞர்களாகவே வரலாறு சுட்டிக்காட்டுகிறது.

இத்தகைய அழகிய வரலாற்றிற்கு சொந்தமான இளைஞர் சமூகத்தின் சமகால அவல நிலைகளை அன்றாடம் செய்தித்தாள்களில் பார்க்கின்றோம்.

ஆனால் இதற்கு நேர் எதிராக இஸ்லாத்திற்கு அப்பாற்பட்ட கொள்கையைச் சார்ந்த எத்தனையோ அன்பர்கள் பல்வேறு சாதனைகளை ஈட்டிக் கொண்டிருப்பதையும் செய்தித்தாள்களில் பார்க்கிறோம்.

இஸ்லாமியர்களுக்கு எந்த வளமான சூழலும் இல்லாத கடந்த

காலத்தில் இளைஞர்கள் சாதித்ததற்கும், எல்லா வளங்களும் இருந்தும் இன்று இளைஞர் சமூகம் தரிகெட்டுக் கிடப்பதற்கும் என்ன காரணம்?

மூன்று விதமான பயிற்சிகள் கடந்தகால இளைஞர்களுக்கு முறையாக வழங்கப்பட்டது. அதனாலேயே அவர்களால் வளமான வரலாற்றை உருவாக்க முடிந்தது.

**1. மனோபலம்**

மனோபலம் என்று கூறும் போது வெறும் வெற்று தைரியத்தை மட்டும் ஊட்டுவதல்ல. மாறாக இறையாதரவையும், இறையச்சத்தையும் நிரப்புவதாகும். அப்போதே உறுதியான மனோபலத்தை பெற முடியும்.

இத்தகைய நிலையை அடையவே இஸ்லாம் ஒவ்வொரு தொழுகையிலும் மனோபலத்தை பெறுவதற்கான பயிற்சியை அளிக்கிறது.

அல்குர்ஆனின் 6 வது அத்தியாயத்தின் 162 வது வசனம் அதற்கான பயிற்சியை அளிக்கிறது :

إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعٰلَمِيْنَ

எனது தொழுகையும், எனது வணக்கமும், எனது வாழ்வும், எனது மரணமும் அகிலத்தின் ரப்பாகிய அல்லாஹ்விற்கே உரியது.

**நபி (ஸல்) அவர்களின் மனோபலம்**

நபியவர்கள் எந்த சமுதாயத்திற்கு அனுப்பப்பட்டார்களோ அந்த குரைஷி குலத்தார், பெருமானாரின் இறை அழைப்புப் பணிக்கு மிகப்பெரும் எதிர்ப்பாளர்களாக திகழ்ந்தனர்.

இத்தகைய மக்களிடம் தன்னந்தனியாக நின்று, நீங்கள் எண்ணியதை நீங்களே செய்து கொள்ளுங்கள். நான் என்ன செய்ய வேண்டுமோ, அதை நான் செய்து கொள்வேன் என்று நெஞ்சுறுதியோடு செயல்பட்டவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள்.

இறைவன் கூறுகிறான் ;

قُلْ يَا قَوْمِ اعْمَلُوا عَلَىٰ مَكَانَتِكُمْ إِنِّي عَامِلٌ فَسَوْفَ تَعْلَمُونَ

என் சமூகத்தினரே! உங்களது நிலைமையின் மீதே

நீங்கள் (செய்வதை) செய்து கொண்டிருங்கள். (எனது வழிப்படி) நிச்சயமாக நான் செய்து வருபவன். ஆகவே (எவருடைய செயல் சரியானது என்பதை அடுத்து) நீங்கள் அறிந்து கொள்வீர்கள் என்று (நபியே) நீர் கூறுவீராக.

**(அல்குர்ஆன் - 39 : 39)**

**படிப்பினை**

நபித்துவத்தின் பத்தாம் ஆண்டில் நபி (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட கவலைகள் போன்று அவர்களது ஜீவித காலத்தில் எப்போதுமே ஏற்பட்டதில்லை. முதலின் தன்னை வளர்த்து ஆளாக்கிய அபூதாலிப் அவர்களின் மரணம், அடுத்து சில காலத்திற்குள்ளாக தனது நுபுவ்வத்திற்கு முதல் சாட்சியாக இருந்த அன்னை கதீஜா (ரளி) அவர்களின் மரணம், பிறகு இவைகளை மறப்பதற்கென்றே நபியவர்கள் மேற்கொண்ட தாயிஃப் நகரப் பயணம். அங்கு நினைத்ததற்கு மாற்றமாக கல்லாலும், சொல்லாலும் அடிபட்டு இரத்தம் சிந்தும் நிலை. அதனால்தான் வரலாறு இவ்வாண்டிற்கு 'ஆமுல் ஹுஸ்ன்' நபி (ஸல்) அவர்களின் 'கவலை ஆண்டு' எனப் பெயரிட்டது.

இவ்வளவு துயரங்களையும், துன்பங்களையும் அனுபவித்த இக்காலத்திற்குப் பிறகுதான் நபியவர்களின் இறை கொள்கையை எடுத்துக் கூறும் பணி சூடு பிடித்தது.

இத்துனை கவலைகளுக்குப் பின்னாலும் நபியவர்கள் மிகப்பெரும் புரட்சியை ஏற்படுத்த அவர்களுக்கு உறுதுணையாக அமைந்தது அவர்களது இறையாதரவு கலந்த மனோபலம்தான்.

**நபித்தோழர்களின் மனோபலம்**

நபித்தோழர்களைப் பற்றி இறைவன் குறிப்பிடும்போது

رَضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ

என்று சிறப்பிக்கிறான்.

இத்தகைய சுபச் செய்தியை அவர்கள் முழுமையாக அடைவதற்கு அவர்களது மனோபலமே காரணமானது என்பதற்கு நிறைய வரலாறுகள் நமக்கு சான்றாக அமைந்துள்ளது.

ஹிஜ்ரத்தின் போது ஸஹாபாக்கள் மிகப்பெரும் மனவலிமையுடன் நபியவர்களுக்கு பூரண ஒத்துழைப்பை அளித்தனர். அது மட்டுமல்ல. அதற்காகவே தனது சொந்த பூமியை, இருப்பிடத்தை, குடும்பத்தை, பிள்ளைகளை துறப்பதற்கு தயாரானார்கள்.

அதே போல் நபியவர்களின் வஃபாத்தின் போது எல்லா நபிதோழர்களும் தனது ஈமானில் தடுமாறிப் போயினர். ஏன்? உமர் (ரளி) அவர்கள் கூட, தனது வாளை உறுவிக் கொண்டு நபியவர்கள் இறந்து விட்டார்கள் என்று யாராவது சொன்னால் அவனது தலையை துண்டாக்கிவிடுவேன் என்று சப்தமிடுமளவிற்கு மிகப்பெரும் குழப்பம்.

இத்தகைய பெரும் குழப்பத்திற்கு தீர்வாக, ஹழ்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள் ஒரேயொரு இறை வசனத்தை அடிப்படையாக வைத்து நிகழ்த்திய மனோ வலிமை நிறைந்த உரைதான் ஸஹாபாக்களின் மிகப்பெரும் தடுமாற்றத்திற்கு விடை கொடுத்தது. அவர்கள் தனது உரையில் பயன்படுத்திய பொறிதட்டும் வசனம் இதுதான் :

وَمَا مُحَمَّدٌ إِلَّا رَسُولٌ قَدْ خَلَتْ مِن قَبْلِهِ الرُّسُلُ ۚ أَفَإِن مَّاتَ أَوْ قُتِلَ انقَلَبْتُمْ عَلَىٰ أَعْقَابِكُمْ ۚ وَمَن يَنقَلِبْ عَلَىٰ عَقِبَيْهِ فَلَن يَضُرَّ اللَّهَ شَيْئًا ۗ وَسَيَجْزِي اللَّهُ الشَّاكِرِينَ

மேலும் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஒரு தூதரேயன்றி (வேறு) அல்லர். அவருக்கு முன்னர் தூதர்கள் (பலர்) திட்டமாகச் சென்று விட்டனர். எனவே அவர் இறந்து விட்டால், அல்லது வெட்டப்பட்டுவிட்டால் உங்களுடைய குதிங்கால்களின் மீது நீங்கள் (புறங்காட்டித்) திரும்பி விடுவீர்களா? (அவ்வாறு) எவரேனும் தம் குதிங்கால்களின் மீது திரும்பி விடுவாராயின், அதனால் அவர் அல்லாஹ்வுக்கு எந்த இடையூறும் செய்திடவே முடியாது. மேலும், அல்லாஹ் நன்றி செலுத்துவோருக்கு மிக விரைவில் (நற்) கூலியை

வழங்குவான்.

**(அல்குர்ஆன் - 3 : 144)**

இந்த ஒரேயொரு இறைவசனம்தான் ஸஹாபாக்களை இஸ்லாத்திற்காக பல தியாகங்களைச் செய்யத் தூண்டியது.

இது கடந்த கால வரலாறுகள் என்றாலும் சமகாலத்திலும் இது போன்ற எழுச்சி மிக்க நிகழ்வுகள் ஆங்காங்கே நமது இஸ்லாத்தின் இளைஞர்களால் நிகழ்த்தப்படுவது மனதிற்கு மகிழ்ச்சியளிக்கிறது.

**சமகால படிப்பினை**

மத்திய பிரதேச மாநிலம் 'நிர்மலா' என்ற பள்ளியில் கல்வி பயிலும் சலீம் என்ற மாணவன், தான் வைத்திருந்த தாடியைக் காரணம் காட்டி பள்ளியிலிருந்து நீக்கப்பட்டான்.

அம்மாணவன் சற்றும் மனம் தளராமல் இது எனது அடிப்படை உரிமை என்கிற, சட்டத்தின் 25 வது பிரிவின் கீழ் பள்ளி மீது வழக்கு தொடர்ந்தான். இதற்கு தீர்ப்பு வழங்கிய நீதிபதி மார்கண்டயே கட்ஜு இது தாலிபானிஸம் என்றார். சலீம் விடவில்லை. மீண்டும் போராடினான். பிரதமரும், ஆட்சியாளர்களும் வைத்தால் தாடி? நாங்கள் வைத்தால்..? என்றெல்லாம் கேள்விகள் எழுப்பி சிந்திக்க வைத்தான்.

இறுதியில் அவரை நீக்கியது செல்லாது என பல நீதியரசர்களின் விசாரணைக்குப் பிறகு பள்ளிக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டது. எனவே சமகால சலீமின் வரலாறும் கூட இன்றைய இளைஞர்களுக்கு மிகப்பெரும் படிப்பினைதான்.

**2. அறிவு பலம்**

இது இறைவனிடமிருந்து வழங்கப்படும் மிகப்பெரும் அருட்கொடை. இதை இறைவன் தான் நாடியவர்களுக்கு மட்டுமே வழங்குகிறான்.

இறைவன் தனது அருள் மறையில் குறிப்பிடுகிறான் ;

يُؤْتِي الْحِكْمَةَ مَنْ يَّشَاءُ

தான் நாடியவருக்கு அல்லாஹ் ஞானத்தை வழங்குகிறான்.

## அறிவுத் திறனில் ஸஹாபாக்கள்

*இப்னு ஜுபைர் (ரளி) அவர்கள் தன்னிடமிருந்த நூறு அடிமைகளிடமும் அவரவர் மொழிகளில் உரையாடுவார்கள்.

*ஜைதுப்னு ஸாபித் (ரளி) அவர்கள் தனது 15 வது வயதில், சுர்யானி பாஷையை வெறும் 17 நாட்களில் கற்று முடித்தார்கள்.

உலகின் மிகப்பெரும் நிலப்பரப்பை ஆட்சி செய்த ஹழ்ரத் உமர் (ரளி) அவர்களின் கூற்று இளைஞர்களுக்கு எக்காலமும் காதில் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டியவை.

எவன் இஸ்லாத்தை மட்டும் அறிந்து, இஸ்லாம் அல்லாத கொள்கைகளை அறியாமல் விட்டுவிடுவானோ அவன் இஸ்லாத்தையே அழித்து விடுவான் என்று நான் பயப்படுகிறேன் என்றார்கள்.

எனவே ஒரே துறையில் மட்டும் காலம் கழிக்கும் நமது இளைஞர்கள் இது போன்றோரின் வரலாறுகளை அறிந்து எல்லாத்துறைகளிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதை காலத்தின் கட்டாயமாக உணர வேண்டும்.

## 3. உடல் பலம்

மதுவும், சிகரெட்டும், காதல் எனும் பெயர் கொண்ட காமமும், சிந்தனையை சீரழிக்கும் செல்போன்களும் இல்லாதவர்கள் மாணவர்களாக இருக்கக் கூடாது எனும் எழுதப்படாத சித்தாந்தத்தை இன்றைய இளைஞர் சமூகம் கடைபிடிக்கிறது.

எவ்வளவு மன வேதனையான நிகழ்வுகள் இவை! இதன் பின்னணியில் கொலை, கற்பழிப்பு போன்ற பயங்கர செயல்களெல்லாம் சாதாரணமாகிவிட்டன. இதனால் இளைஞர்கள் அடையும் பலன்? உடல் ரீதியான சீரழிவு மட்டுமே என்றால் அது மிகையல்ல!

அதனால்தான் இஸ்லாம் உடல் பலத்திற்கும் அதை வலுப்படுத்தவும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான் ;

وَأَعِدُّوا لَهُم مَّا اسْتَطَعْتُم مِّن قُوَّةٍ وَمِن رِّبَاطِ الْخَيْلِ تُرْهِبُونَ بِهِ عَدُوَّ

اللّٰهِ وَعَدُوَّكُمْ وَاٰخَرِيْنَ مِنْ دُوْنِهِمْ لَا تَعْلَمُوْنَهُمْ اَللّٰهُ يَعْلَمُهُمْ ۚ وَمَا تُنْفِقُوا مِنْ شَيْءٍ فِي سَبِيْلِ اللّٰهِ يُوَفَّ إِلَيْكُمْ وَأَنْتُمْ لَا تُظْلَمُوْنَ

அவர்களுக்காக (அவர்களை எதிர்ப்பதற்காக ஆயுத) பலத்தையும், குதிரைகளை கட்டி வைப்பதையும் உங்களால் முடிந்த அளவு ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் பகைவரையும், உங்களுடைய பகைவரையும், அவர்களன்றி வேறு சில (பகைவ)ரையும் நீங்கள் அச்சமடையச் செய்யலாம்.

**(அல்குர்ஆன் - 8 : 60)**

பெருமானாரின் கூற்றைப் பாருங்கள்;

اَلْمُؤْمِنُ الْقَوِيُّ خَيْرٌ وَاَحَبُّ اِلَى اللّٰهِ مِنَ الضَّعِيْفِ

பலவீனமான முஃமினை விட பலமுள்ள முஃமினே அல்லாஹ்விடம் அதிக பிரியத்திற்குரியவன்.

நபியவர்கள் காலத்தில் இறையில்லங்கள் மல்யுத்த கூடங்களாகவும் சில நேரங்களில் இருந்தது. எனவே உடல் ரீதியான பயிற்சியும் இன்றைய இளைஞர் சமூகத்திற்கு அவசியத்தேவை.

## இறுதியாக சில வரிகள்...

அமெரிக்காவைச் சார்ந்த மிகப்பெரும் ஆய்வாளர் 'சாமுவேல் ஹன்டிஸ்டன்' (இவன் இஸ்லாத்திற்கு விரோதமானவன் என்பதை கவனத்தில் கொள்ளவும்) மிகப்பெரும் ஆய்வாளர். இவர் ஆய்வு செய்த பெரும்பாலான விஷயங்கள் இதுவரை நடந்துள்ளது. இவர் தனது ஆய்வில் ஆச்சரியம் தரும் செய்தி ஒன்றை கூறுகிறார் :

2025 ல் உலகில் மிகப்பெரும் இஸ்லாமிய புரட்சி ஏற்படும். அப்புரட்சி பெரும்பாலும் இஸ்லாமிய இளைஞர்களாலேயே ஏற்படும். இதுவே அவரது கூற்று.

இது அவரது ஆய்வுதான் என்றாலும் நடப்பதற்கு நிச்சயம் சாத்தியமானதே. இளைஞர்கள் தயாரானால் 2025 ல் நிச்சயம் ஒரு இஸ்லாமிய புரட்சி ஏற்படும். அதில் எத்தகைய சந்தேகமுமில்லை.